2010 நவம்பர் 10]

அங்கே இருக்கின்ற நகராட்சியில், தனியாக, நாங்கள் மேற்குத் தொடர்ச்சி மலை தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அங்கும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திலே இராஜபாளையம் நகராட்சியை இணைப்பதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று தங்களின்வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

உழவர் சந்தை

***112783—திரு. சுப. மதியரசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி தொகுதி, சாலைக்கிராமத்தில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி தொகுதி, சாலைக்கிராமத்தில் உழவர் சந்தை அமைப்பதற்கான வாய்ப்புகள் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.*

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி தொகுதியில், சாலைக் கிராமப் பகுதியில்தான் அதிக அளவில் காய்கறி விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியத்திற்கும், இளையான்குடி ஒன்றியத்திற்கும் மையப் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய ஊர். எங்கள் பகுதியில் அதிகமான அளவில் புன்செய் விவசாயம் நடைபெறுகிறது. அங்கே விளையக்கூடிய காய்கறிகளை விற்பனை செய்ய பரமக்குடிக்குத்தான் கொண்டு போக வேண்டும். இது அதிகமான தூரத்தில் இருக்கிற காரணத்தால், தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கருணை உள்ளத்தோடு—தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி, விவசாயிகளுக்கு பல நன்மைகள் செய்த ஆட்சி—இந்த நன்மையையும் எங்களுக்குச் செய்துதரும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி வட்டத்தில் மிளகாய் 4,150 எக்டரிலும், இதர காய்கறிகள் 70 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டு 4,250 மெட்ரிக் டன் மிளகாய் மற்றும் காய்கறிகள் 700 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் மற்றும் பழங்கள் ஓர் உழவர் சந்தைக்குத் தேவையான அளவிற்கு இல்லாத காரணத்தினாலும், பெரும்பாலும் விவசாயிகளே நிறைந்த பகுதியாக இருப்பதாலும், மாதாந்திரச் சம்பளம் பெறும் நுகர்வோர்கள் மிகக் குறைவாக உள்ளதாலும் இங்கு புதிய உழவர் சந்தை அமைக்க இயலாது. ஏற்கெனவே சிவகங்கை மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. சிவகங்கை மற்றும் திருப்பூர் உழவர் சந்தைகள் மட்டுமே சிறப்பாக இயங்கி வருகின்றன. இந்த நிலையில் அங்கு உழவர் சந்தை திறப்பதற்கான வாய்ப்பு இல்லை. கலைஞர் ஆட்சியில் கருணை உண்டு, ஆனால் உழவர் சந்தைக்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

2010 நவம்பர் 10]

முற்பகல் 9-40

திரு. சுப. மதியரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது இளையான்குடி ஒன்றியத்தை மட்டும் பார்க்கிறார்கள். ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. அங்கே அதிகமான அளவு காய்கறிகள் இருக்கின்றன, இங்கேயும் இருக்கின்றன. இரண்டையும் சேர்த்துப் பார்த்தால், இங்கு கண்டிப்பாகத் திறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று மீண்டும் ஆய்வு செய்து, சாத்தியம் இருக்குமானால் உழவர் சந்தை தொடங்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதியில் உள்ள தோகைமலை மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசிக்கின்றனர். அந்தப் பகுதியிலே நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. அங்கே விளைகின்ற காய்கறிகளை விற்பனை செய்வதற்கு 50 கிலோ மீட்டர் கடந்து திருச்சிக்கும், மணப்பாறைக்கும் செல்லவேண்டிய சூழ்நிலையில் அந்தப் பகுதி விவசாயிகள் இருக்கின்றனர். ஆகவே, தோகைமலையிலே ஓர் உழவர் சந்தை அமைத்துக்கொடுத்தால் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் மிகுந்த உதவியாக இருக்கும். ஆகவே, தோகைமலையிலே உழவர் சந்தையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது பற்றித் தனியாக ஒரு கோரிக்கை அரசுக்குக் கொடுத்தால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

14—

நீதிமன்ற வளாகம்

***60747—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் தனி நீதிமன்ற வளாகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தப்பட்ட விடையினைப் படிக்கத் தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன். ஓமலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க 16-4-2010 அன்று 303.20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 23-5-2010-இல் ஓமலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று, தற்போது பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் நீதிமன்றம் சுதந்திரம் அடைந்த காலத்திற்கு முன்பே தொடங்கப்பட்ட நீதிமன்றம். எனவே, தொடர்ந்து நானும், பகுதி